# “புதிய அவதாரத்தில் குலக்கல்வி” கடுமையாக எதிர்க்க வேண்டும்!

## தமிழ்நாடு அரசுக்கு கி.வீரமணி வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 20-

“குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கத் திட்டமிட்டுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘விஸ்வ கர்மா’ திட்டத்தை அனைத்துக் கட்சிகளையும் ஒன்று திரட்டி முதல்வர் கடுமையாக எதிர்க்க வேண்டும்” என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கூறியுள் ளார்.



இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், “சனாதன தர்மத்தை, சாதியை காப்பாற்றி நிலைக்க வைக்கும் தத்துவத்தைப் பாதுகாப்பதே கடந்த 9 ஆண்டுகளாக நடந்துவரும் பா.ஜ.க. ஆட்சியின் செயல்பாடாகும். உயர்ந்தவன் தாழ்ந்தவன்; தொடக்கூடியவன் தொடக்கூடாதவன் என்று மனி தர்களை வேற்றுமைப் படுத்தி, அடிமைப்படுத்திய குலதர்மப் பாம்பு, பிரதமர் மோடிஆட்சியில் திடீரெனப் படமெடுத்தாடி அதன் நச்சுப் பல்லை நீட்டிக் காட்டுகிறது. “விஸ்வகர்மா திட்டம்'' என்பதின்படி ஒரு புதிய குலதர்மத் தொழிலைப் புதுப் பித்து, ஒடுக்கப்பட்ட மக்கள்மீது சுமத்தப்பட்ட அந்தப் பிறவி இழிவை மறைமுகமாகப் புதுப்பித்து, அந்த “கீழ்சாதியர் அவரவர் குலத் தொழிலை கிராமங்களிலும், நக ரங்களிலும் 30 லட்சம் பேர் செய்வார்கள் அதற்கு நிதி, மானியம் உதவி உண்டு என்று ஆகஸ்ட் 15 ஆம் நாளில் டெல்லி செங்கோட்டை உரை யில் பேசியுள்ளார் பிரதமர் மோடி.

‘பி.எம். விஸ்வகர்மா'' திட்டம் என்பதை அமைச் சரவையின் பொரு ளாதார குழு ஏற்று ரூ.13,000 கோடி ஒதுக்கியுள்ளது. பள்ளிக் கூடங்களுக்குப் பதிலாக குரு சிஷ்ய பரம்பரைக் கல்விப் பயிற்சியாம். 2023-2024 முதல் 2027-2028 வரை இத்திட்டப்படி குலத் தொழிலை செய்ய அவரது வாரிசுகளுக்கு, குடும் பத்தினருக்கு கற்றுக் கொடுப்பார் களாம். அதற்கு இந்த 13,000 கோடி ரூபாயாம்.18 பாரம்பரிய குலத் தொழிலை அடையாளம் கண்டுள்ளார்களாம்.

தச்சுத் தொழில், படகு செய்தல், கருமான் பட்டறைத் தொழில், குய வன் மண்பாண்டத் தொழில், சுத்தி முதல் துடைப்பம் விளக்குமாறு கட்டும் தொழில் (Broom Maker), பொம்மை செய்தல், சிகை திருத்தும் தொழில்(Barber), கைத்தறித் தொழில், பூக் கட்டும் தொழில், சலவைத் தொழில், தையல் தொழில், மீன் பிடித் தொழில் முதலியன இத்திட்டத்தில் வருகிறதாம். இதனைச் செய்யப் பழகுவோருக்கு ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை மானிய அடிப்படையில் கடன் அளிப்பார்களாம்.தூண்டில் எவ்வளவு லாவகமாக அமைக்கப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா? இளைஞர்களே, நீங்கள் உங்கள் குலத்தொழிலைச் செய்தாக வேண்டும் என்றால், நிரந்தர இழிவும், அடிமைத்தனமும்தான் இந்த பா.ஜ.க. ஆட்சியில் உங்களுக்குக் கிட்டும்,

சமத்துவ சமுதாயம் காண விரும்பும் அனைவரும் ஒன்றுபட்டு உடனடியாக ஓர் அணியில் திரண்டு எழுந்து எதிர்ப்புக் கடலாய்ப் பொங்கி எதிர்த்து இத்திட்டத்தை கருவிலேயே அழித்து, குலத்தொழில் பாதகத்தை ஒழித்துக் கட்டவேண்டும். தமிழகம் இத்திட்டத்துக்கு ஒருபோதும் இசைவு தராது; கடுமையாக எதிர்க்கும் என்பதைப் பிரகடனப்படுத்துவதும் அவசர, அவசியம்” என்றும் வீரமணி அவர்கள் கூறியுள்ளார்.

---

### மீனவர்களையும், தொழிலையும் பாதுகாக்கும் வகையில்

# ஓசையின்றி சேவை செய்யும் தமிழ்நாடு முதல்வருக்கு கிரேட் சல்யூட்!

### ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு மழை!

சென்னை, ஆக. 20-

ராமேஸ்வரத்தில் மீனவர் நல மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் உயரவும் அவர்களின் குறைகளை நிறைவேற்றும் வகையில் முத்தான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இத்திட்டத்திற்காக ரூ.926.88 கோடி நிதியும் ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார். இதனால் மீனவர்கள் மகிழ்ச்சிக் கடலில் உள்ளனர். இந்த நிகழ்வை ‘தினகரன்’ நாளேடு தனது தலையங்கத்தில் தனது வாழ்த்துகளையும், பாராட்டு மழையையும் தெரிவித்து “கிரேட் சல்யூட்” அடித்துள்ளது.



தினகரன்

ஆகஸ்ட் 19, 2023 சனிக்கிழமை

பாசக்கரம் நீட்டிய முதல்வர்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றான ராமேஸ்வரத்தில் நேற்று நடந்த மீனவர் நல மாநாட்டில் பங்கேற்று பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மீனவர்களின் நலன் கருதியும், மீன்பிடித்தொழில் மேம்பாட்டுக் காகவும் 10 அறிவிப்புகளை வெளியிட்டு அசத்தியுள்ளார். அதாவது, மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தில் 5,035 பேருக்கு பட்டா, 45 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன், மீன்பிடி தடைக்காலத்தின்போது வழங்கப்பட்ட நிவாரணம் ₹5 ஆயிரத்தில் இருந்து ₹8 ஆயிரமாக உயர்வு, 1,000 நாட்டுப்படகு மீனவர்களுக்கு 40 சதவீத மானியத்தில் இயந்திரங்கள், நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு 3,400 லிட்டரில் இருந்து 3,700 லிட்டராக அதிகரிப்பு,

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றான ராமேஸ்வரத்தில் நேற்று நடந்த மீனவர் நல மாநாட்டில் பங்கேற்று பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மீனவர்களின் நலன் கருதியும், மீன்பிடித்தொழில் மேம்பாட்டுக்காகவும் 10 அறிவிப்புகளை வெளியிட்டு அசத்தியுள்ளார். அதாவது, மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தில் 5,035 பேருக்கு பட்டா, 45 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன், மீன்பிடி தடைக்காலத்தின்போது வழங்கப்பட்ட நிவாரணம் ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக உயர்வு, 1,000 நாட்டுப்படகு மீனவர்களுக்கு 40 சதவீத மானியத்தில் இயந்திரங்கள், நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு 3,400 லிட்டரில் இருந்து 3,700 லிட்டராக அதிகரிப்பு, விசைப்படகுகளுக்கு மானிய விலையில் டீசல் 18 ஆயிரம் லிட்டரில் இருந்து 19 ஆயிரம் லிட்டராக உயர்வு, நாட்டுப்படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டரில் இருந்து 4,400 லிட்டராக உயர்வு, தங்கச்சிமடத்தில் மீன்பிடி துறைமுகம் மற்றும் பாம்பன் வடக்கு பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி, மீனவர் விபத்து காப்புறுதி திட்டம் மற்றும் காணாமல் போன மீனவர் குடும்பத்துக்கு சுழல் நிதி வழங்கும் திட்டம், மீனவர் வீட்டு வசதி அலகுத்தொகை ரூ.1.7 லட்சத்தில் இருந்து ரூ.2.4 லட்சமாக உயர்வு, மீனவ கிராமங்களில் கடல் அரிப்பை தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும் என முத்தான அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

இந்த திட்டங்களுக்காக ரூ.926.88 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 2,77,347 மீனவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் அறிவித்துள்ளார். கடந்த 2 ஆண்டுகளில் மீனவர் நலனுக்காக திமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. குறிப்பாக, நீண்ட காலமாக மீன்வளத்துறை என அழைக்கப்பட்ட இத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை என மாற்றப்பட்டது. 14 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 2.07 லட்சம் மீனவர்களுக்கு கடந்த 2 ஆண்டில் ரூ.67 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி தொழிலில் 5வது பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1,076 கி.மீ. நீளமான கடற்கரையை கொண்ட தமிழ்நாடு, மீன்பிடித்தொழிலில் தொடர்ந்து முத்திரை பதித்து வருகிறது.

வகை வகையாக கடலில் அன்றே கலம் செலுத்தியவர்கள் நம் தமிழர்கள். இப்படி நம் மீனவர்களுக்குரிய பெருமை ஒருபக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் எல்லை தாண்டுதல் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, இந்திய மீனவர்கள் மீது, இலங்கை கடற்படை துப்பாக்கி சூடு நடத்துகிறது. இதை, ஒன்றிய அரசும், பிரதமர் மோடியும் கண்டுகொள்வதில்லை. இப்படி இருக்கையில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நம் மீனவர்களையும், அவர்களது தொழிலையும் பாதுகாக்கும் வகையில், நேரில் சென்று பாசக்கரம் நீட்டியுள்ளார். இது, மீனவர்கள் கண்களில் ஆனந்த கண்ணீரை வரவழைத்துள்ளது.

கடலை நம்பி, தமிழ்நாட்டில் பல லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடலில் இருந்து மனிதனுக்கு தேவையான உணவுப்பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை கிடைக்கிறது. இந்நிலையில், எதிர்காலத்தில் மனித குலத்துக்கு தேவையான உணவில், 90 சதவீதம் கடலில் இருந்தே பெறப்போகிறோம் என்று ஆய்வாளர்கள் கூறு கின்றனர். அத்தகைய கடல் உணவுகளை, மழை, வெயில், புயல் என பாராது கரைக்கு கொண்டுவந்து சேர்க்கும் நம் மீனவர் நலன் காக்க, ஓசையின்றி சேவை செய்து வரும் தமிழ்நாடு முதல்வருக்கு கிரேட் சல்யூட்.

இவ்வாறு முதல்வருக்கு ‘தினகரன்’ தலையங்கத்தில் ‘கிரேட் சல்யூட்’ அடித்துள்ளது.

---

### நாம் ஒன்றிணைந்து இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக் கொள்வோம்!

# மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி! நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன!

### சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!



**சென்னை, ஆக. 20-**

**மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்று வருவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி தொடங்குவது கண்டு, நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்த அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கடினமான சூழலுக்கு இடையே மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் அதனால் துவளாமல் மீண்டுள்ளது மிகவும் நெகிழ்ச்சியடைய வைக்கிறது. அவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் பயிற்சியைத் தொடங்குவதைக் கண்டு, நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன. மணிப்பூரில் இருந்து தமிழ்நாட்டில் பயிற்சி பெற வந்துள்ள 15 வீரர்கள் மற்றும் 2 பயிற்சியாளர்கள் இப்போது எங்கள் விளையாட்டுக் குடும்பத்தின் ஒரு பகுதியாகி உள்ளனர்.

இது எல்லைகளுக்கு அப்பால் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது. நாம் ஒன்றிணைந்து, இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக் கொள்வோம்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### கழக முன்னாள் அமைப்பு செயலாளர்

# விருத்தாசலம் எம்.செல்வராஜ் நினைவுதினம்!

### மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ் குமார் தலைமையில் அமைதி ஊர்வலம்!

விருத்தாசலம் ஆக 20-

தி.மு.கழக முன்னாள் அமைப்பு செயலாளர் தென்னாற்காடு ஒருங்கிணைந்த முன்னாள் மாவட்ட செயலாளர் “பேரறிஞர் அண்ணா அவர்களால் சீமான் வீட்டு செல்ல பிள்ளை” என்று அழைக்கப்பட்ட விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெருக்கடி நிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் “பெரியார் விருது” பெற்ற எம். செல்வராஜின் 26 ஆம் ஆண்டு நினைவு தினம் 18.08.2023 அன்று அனுசரிக்கப்பட்டது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் -தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆலோசனைப்படி விருத்தாசலம் உழவர் சந்தை அருகில் அமைக்கப்பட்டிருந்த எம். செல்வராஜின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பிறகு பாலக்கரையிலிருந்து மாவட்ட இளைஞரணி, அமைப்பாளர் எம். எஸ். கணேஷ் குமார் தலைமையில் அமைதி ஊர்வலமாகச் சென்று அன்னாரது இல்லத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி புகழஞ்சலி செலுத்தப்பட்டது

இந்நிகழ்ச்சியில் நகரக் கழக செயலாளர் க. தண்டபாணி, நகர மன்ற தலைவர்கள் டாக்டர்.சங்கவி முருகதாஸ், பாரி, இப்ராஹிம், ஒன்றிய செயலாளர்கள் தி. வேல்முருகன், பாவாடை கோவிந்தசாமி, கனக. கோவிந்தசாமி, சுரேஷ், முருகன், பேரூர் செயலாளர் செல்வம், பொதுக்குழு உறுப்பினர் அரங்க பாலகிருஷ்ணன், மகளிரணி குரு சரஸ்வதி, ஆரோக்கிய செல்வி, துணை செயலாளர்கள் எஸ்.ராமு, நம்பிராஜன், சந்தானலட்சுமி, சுந்தரமூர்த்தி, முத்து, தலைவர் செங்குட்டுவன், மாவட்ட பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், வழக்கறிஞர்கள் எம்.கே. அருள்குமார், இளங்கோவன், கே. ரவிச்சந்திரன் மற்றும் தட்சிணாமூர்த்தி, அறிவுடை நம்பி, சுரேஷ், ஏ. ஆர்.கதிரவன், வெங்கடேஷ் சிவா, அன்பழகன், சதீஷ்குமார், பொறியாளர் அணி கார்த்திக், இளைஞரணி பொன்.கணேஷ், தர்ம.மணிவேல், நடராஜன், தளபதி குமார், கார்த்திக் மற்றும் ஆத்மா, குமார், ஸ்ரீதர், மதி, இளையராஜா, பாசில், கவுன்சிலர்கள் ராசாத்தி, சரவணன், தீபா, மாரிமுத்து, அறிவழகி, முருகன், உஷா, பாலு ஆகியோர் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர்.

---

### ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




---

### நீட் திணிப்பு : ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழக ஆளுநரை கண்டித்து

# வேலூரில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

### மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ வேண்டுகோள்!

வேலூர், ஆக. 20-

நீட் தேர்வை ரத்து செய்ய கோரி இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் உண்ணாவிரத அறப்போர் நடத்திட கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க வேலூரில் உண்ணாவிரத அறப்போர் நடைபெறும் என மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் அறிக்கை பின்வரு மாறு:-



புற்றுநோயை விட கொடிய உயிர்கொல்லி நோயான இன்று தமிழகத்தையே பீடித்திருக்கும் நீட் எனும் கொடிய நோயினால் தமிழ்நாட்டில் மாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். மேலும் மாணவர்கள் மட்டுமின்றி அவர்களை சார்ந்த குடும்பமும் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். குறிப்பாக அரியலூர் அனிதா மூலமாக நிகழ்ந்த நீட் மரணம் படிப்படியாக தமிழ்நாட்டில் பரவி இன்று குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் மற்றும் அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இந்த உயிர்பலி மரணத்திற்கு ஒன்றிய பாஜக அரசும் இவர்களுக்கு துணை போகும் அடிமை அ.தி.மு.க. மற்றும் ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோரே காரணமாகும். இந்த அவலங்களை போக்கி மாணவர்களின் மருத்துவ கனவை நனவாக்க கழக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான தளபதி அவர்கள் தொடர்ந்து பல கட்ட முயற்சிகளை எடுத்து வருகிறார்.

தமிழக அரசின் அனைத்து முயற்சிகளை யும் தடுத்திடும் வகையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்காமல் முட்டுக்கட்டை போட்டுவருகிறார். தமிழ்நாட்டில் நிகழும் மாணவர்களின் மரண ஓலம் ஆளுநரையோ, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் வராத நீட் தேர்வு அடிமை எடப்பாடி பழனிச்சாமியின் மக்கள் விரோத ஆட்சியின் மூலமாக தமிழ்நாட்டில் கால் பதித்தது. நீட் தேர்வை விலக்கிடும் வகையில் அ.தி.மு.க. அரசால் 2017ம் ஆண்டு நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவை குடியரசு தலைவரால் நிரா கரிக்கப்பட்டு 21 மாதங்கள் வரை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கு தெரிவிக்காமல் அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் மறைத்து தமிழக மாணவர்களுக்கு பெரிய துரோகத்தை இழைத்துள்ளார்கள்.

தற்போது தி.மு.க. அரசால் நீட் தேர்வை முற்றிலுமாக தமிழகத்திலிருந்து அப்புறப்படுத்திட ஏதுவாக என்னென்ன சட்ட நடவடிக்கையை எடுக்க முடியுமோ அவை அனைத்தையும் கழக தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக கழக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணிகளின் சார்பில் கூட்டாக வெளியிட்ட அறிக்கையின்படி நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், அ.தி.மு.க. நிர்வாகிகளையும் மற்றும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியையும் கண்டித்து வேலூர் மாவட்ட திமுக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் இன்று (20.08.2023- ஞாயிற்றுக் கிழமை) காலை 08.00 மணியிலிருந்து மாலை 06.00 மணி வரை வேலூர் கோட்டை முன்புறம் அமைந்துள்ள காந்திசிலை அருகில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது.

எனவே, உண்ணாவிரத அறப்போரில் மாவட்ட திமுக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர செயலாளர், தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள்,நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அணிகளான மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர் அணி விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொண்டர் அணி, மகளிர் தொண்டர் அணி, ஆதிதிராவிடர் நல அணி, வர்த்தகர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமை அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுனர் அணி, வெளிநாடுவாழ் இந்தியர் நல அணி நிர்வாகிகள், வட்ட கழக, வார்டு கழக, ஊராட்சி ஊர்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், கழக முன்னாள் நிர்வாகிகள், முன்னோடிகள், மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு நீட் எனும் கொடிய உயிர்கொல்லி நோயை தமிழகத்திலிருந்து விரட்டி தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவர் கனவை நனவாக்கிட பெருந்திரளாக பங்கேற்று இந்த அறவழி உண்ணாவிரத போராட்டத்தை வெற்றி பெற செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆலோசனைப்படி விருத்தாசலம் உழவர் சந்தை அருகில் அமைக்கப்பட்டிருந்த கழக முன்னாள் அமைப்பு செயலாளர் எம். செல்வராஜின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பிறகு பாலக்கரையிலிருந்து மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ் குமார் தலைமையில் அமைதி ஊர்வலமாகச் சென்று அன்னாரது இல்லத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி புகழஞ்சலி செலுத்தப்பட்டது